www.StudyGuideIndia.com

mat - June - 2011

**8101**

Register Number

# தமிழ் — முதல் தாள்

## ( செய்யுள், உரைநடை )

நேரம் : $2\frac{1}{2}$ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

குறிப்பு : i) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் இருத்தல் வேண்டும்.

ii) வினா எண் III க்குச் செய்யுள் வடிவில் விடை எழுதுதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **ஏழனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை எழுதுக. $7 \times 2 = 14$

1. ஏன் அறநெறி ஓங்குதல் வேண்டும் ?
2. யார் தோன்றலின் தோன்றாமை நன்று ?
3. நல்லாதனார் - குறிப்பு வரைக.
4. சிலப்பதிகாரத்திலுள்ள காண்டங்களின் பெயர்களையும், அவற்றிலுள்ள காதைகளின் எண்ணிக்கையையும் எழுதுக.
5. கடலின் கவின்மிகு காட்சி யாது ?
6. திரிகூட மலையில் விளைவன யாவை ?
7. தொன்னையுள்ளம் எது ?
8. பீர்க்கம்பூவை எதற்கு உவமிக்கிறார் ?
9. புத்தர் எதை மொழிந்தார் ? எதற்கு உழந்தார் ?

II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **ஐந்தனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளில் விடை தருக. $5 \times 4 = 20$

10. கவிஞர் தமிழை எவ்வாறு வாழ்த்துகிறார் ?
11. திரிகடுகம் - குறிப்பு வரைக.
12. 'கொங்கலர் தார்ச்சென்னி குளிர்வெண் குடை
    போன்றிவ் வங்கண் உலகளித்தலான்'' - உவமையைச் சுட்டி விளக்குக.
13. திருந்திய திருடன் மற்றொரு திருடனிடம் கூறியவற்றை எழுதுக.
14. குறத்தி எந்தெந்த மலைகளைத் தன் உறவினர் மலைகளாகக் காட்டுகிறாள் ?
15. சுற்றுப்புற மேன்மை இல்லையெனில் ஏற்படும் இன்னல்கள் யாவை ?
16. கழுமலவளநகர்ப் பெருந்தகையை ஞானசம்பந்தர் எங்ஙனம் போற்றுகின்றார் ?

[ Turn over

III. பின்வருவனவற்றை அடிபிறழாமல் எழுதுக :

17. 'பேணநோற்' ..... எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை அடிபிறழாமல் எழுதுக. 4

18. 'ஒன்றா' ..... எனத் தொடங்கும் குறட்பாவை எழுதுக. 2

19. 'களிறு' என முடியும் குறட்பாவை எழுதுக. 2

IV. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் பதினைந்து வரிகட்கு மிகாமல் விடை எழுதுக : 1 × 8 = 8

20. சினத்தின் இயல்பையும் அதனை உடைமையாகக் கொள்வார்க்கு வரும் தீங்கினையும் தொகுத்து எழுதுக.

21. கம்பர் அனுமன் வாயிலாக உரைத்த அறநெறிகள் யாவை ?

22. பாரதியார் கூறும் பாரத பூமியின் பெருமைகளைத் தொகுத்து எழுதுக.

V. 23. பொருத்துக : 4 × 1 = 4

| | | |
|---|---|---|
| அ) பாண்டிய நாடு | — | வஞ்சி |
| ஆ) சோழநாடு | — | காஞ்சி |
| இ) சேரநாடு | — | புகார் |
| ஈ) தொண்டைநாடு | — | மதுரை |
| | — | நெல்லை. |

சரியான விடையைத் தேர்ந்தெடுக்க : 6 × 1 = 6

24. திரிகடுகம் ................ அமைந்த நூல்.

அ) வெண்பாக்களால் ஆ) ஆசிரியப்பாக்களால் இ) வஞ்சிப்பாக்களால்.

25. கம்பர் இயற்றிய நூல்களுள் ஒன்று ................

அ) நரிவிருத்தம் ஆ) சரசுவதி அந்தாதி இ) மூவருலா.

26. கபிலர் ................ வருணித்துப் பாடுவதில் வல்லவர்.

அ) குறிஞ்சித் திணையை

ஆ) முல்லைத் திணையை

இ) மருதத் திணையை

27. திரிகூட மலை என்பது ................ .

அ) வேங்கடமலை ஆ) மருதமலை இ) திருக்குற்றால மலை.

28. பொழில் என்பதன் பொருள் ................ .

அ) சுனை ஆ) மலை இ) சோலை.

29. தமிழ்வேந்தர் வெளியிட்ட சின்னக்காசு ................ .

அ) நிலவு ஆ) விண்மீன் இ) செங்கதிரோன்.

www.StudyGuideIndia.com

VI. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **ஐந்தனுக்கு** ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை எழுதுக. 5 × 2 = 10

30. உள்வளத்திறமை என்பது என்ன ?

31. அரங்கேற்றம் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

32. சிதம்பரனாரின் வாக்கு வன்மைக்குச் சான்று தருக.

33. கள்ளுக்கடை மறியலில் முதன் முதலாக வந்த பெண்மணிகள் யாவர் ?

34. பொருள்களின் மூன்று உருவநிலைகள் யாவை ?

35. கடிகை முத்துப் புலவர் இயற்றிய நூல்கள் யாவை ?

36. பொருள் - என்பதன் இருபொருள் நயம் தருக.

VII. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **நான்கனுக்கு** ஒவ்வொன்றிற்கும் *ஆறு* வரிகளில் விடை எழுதுக. 4 × 4 = 16

37. வண்ணம் - சிறு குறிப்பு வரைக.

38. சாதாரணப் பள்ளிக் கூடங்களிலும் கல்லூரிகளிலும் படித்தவர்கள் நிகழ்த்திய சாதனைகளாக அப்துல் கலாம் குறிப்பிடுவன யாவை ?

39. வ.உ.சி. அவர்களின் பண்பு நலன்களைக் குறிப்பிடுக.

40. பெரியாரோடு பிறந்த இரண்டு நல்லுணர்வுகளை விளக்குக.

41. நீர்ப்பொருள் சுருங்கா இயல்பு - விளக்குக.

42. உமறுப்புலவரின் நன்றி மறவாப் பண்பினை விளக்குக.

VIII. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றனுக்கு** மட்டும் பதினைந்து வரிகட்கு மிகாமல் விடை எழுதுக. 1 × 8 = 8

43. குடியரசுத் தலைவரின் பார்வையில் பாக்கியசாலிகள், துர்பாக்கியசாலிகள், அரைகுறைப் பாக்கியசாலிகளாகக் கருதப்படுவோர் யார் ? யார் ?

44. ஔவையாரே பாஸ்கலுக்கு முன்னோடி என்பதனை விளக்குக.

45. வ.உ.சி. அவர்களின் திருக்குறள் ஈடுபாடும் புலமையும் பற்றிக் கூறுக.

[ Turn over

www.StudyGuideIndia.com

IX. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க : 4 × 1 = 4

46. பொருளாதாரச் சாதனைகளுக்கு இட்டுச் செல்வது ................. .

அ) மனித ஆற்றல் வளம்

ஆ) கணிப்பொறி நிபுணத்துவம்

இ) இயற்கை வளம்.

47. நட்புக்குக் கரும்பை உவமையாகச் சொன்ன இலக்கியம் ................. .

அ) திரிகடுகம்

ஆ) நாலடியார்

இ) திருக்குறள்.

48. நீர்ப்பொருள் சுருங்கா இயல்பு என்னும் அறிவியல் உண்மையைக் கண்டுபிடித்தவர் ................. .

அ) நியூட்டன்

ஆ) கலிலியோ

இ) பாஸ்கல்.

49. எட்டப்ப மன்னரின் சபையில் தலைமைத் தமிழ்ப் புலவராய் இருந்தவர் ................. .

அ) சேகுமுதலியார்

ஆ) வாலைவாரிதி

இ) கடிகை முத்துப்புலவர்.

X. கீழ்க்காணும் சொற்களுள் எவையேனும் இரண்டினை மட்டும் வாக்கியத்தில் அமைத்து எழுதுக. 2 × 1 = 2

50. அ) நாளடைவில்

ஆ) செம்மையாக

இ) முதன் முதலாக.

www.StudyGuideIndia.com